Date : **06.10.2023**
Spl.C.C.No : 73/2014
P.W. : 3
பெயர் : திரு.கோபால்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

*(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)*

***எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :***

1. சம்பவ காலத்தில் நான் சிவகங்கை மாவட்ட கருவூத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது எனது அடிப்படை சம்பளம் எவ்வளவு என்றால் சரியாக எவ்வளவு தொகை என்று ஞாபகம் இல்லை. ஆனால் தோராயமாக ரூ.14,000/– இருக்கும். நான் கிளாஸ் C கேடர் என்றால் இல்லை நான் கிளாஸ் பி கேடர் பிரிவு அலுவலராக இருந்தேன்.

2. எதிரிக்கு அடிப்படை சம்பளம் அப்போது எவ்வளவு என்பது தெரியுமா என்றால் தெரியாது. எதிரி அப்போது பி கேடர் அலுவலர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 09.11.2011 ஆம் தேதி லஞ்ச ஒழிப்பு அலுலகத்தில் இருந்து என்னை அவர்களது அலுவலகத்திற்க வரச்சொல்லி நேரடியாக அழைப்பாணையோ, அறிவிப்போ வரவில்லை என்றால் சரிதான்.

3. என்னுடைய மேல் அதிகாரி என்னை லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு செல்லுமாறு எழுத்துமூலமான உத்தரவு எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. அன்றைய தினம் நான் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு

செல்வதற்காக விடுப்பு எதுவும் எடுத்து சென்றேனா என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்திற்கு அனுமதி கடிதம் எதுவும் நான் கொடுக்கவில்லை. எங்களது அலுவலகத்தில் உள்ள Movement Register –ல் குறிப்பு எதுவும் செய்துவிட்டு சென்றேனா என்றால் ஞாபகம் இல்லை.

4. நான் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றவுடன் ஆய்வாளர் என்னை சாட்சியாக இருக்க சொன்னபோது சாட்சியாக இருக்க விருப்பம் இல்லை என்று மறுப்பு எதுவும் நான் தெரிவித்தேனா என்றால் இல்லை. அ.சா.2 முருகசாமி என்பவர் கொடுத்தாக சொல்லும் புகாரின் அசலையோ அல்லது நகலையோ பார்த்தேனா என்றால் நகலை பார்த்தேன். அந்த புகார் கையால் எழுதப்பட்டதாகும். அதில் முருகசாமி மட்டும்தான் கையெழுத்து செய்திருந்தார்.

5. முதல் தகவல் அறிக்கையின் அசலை பார்த்தேனா என்றால் இல்லை நகலை பார்த்தேன். முதல் தகவல் அறிக்கையின் முன்பக்கம் கையால் எழுதப்பட்டும் பின்பக்கம் தட்டச்சு செய்யப்பட்டும் இருந்தது. அதில் காவல் ஆய்வாளர் மட்டும்தான் கையெழுத்து செய்திருந்தார். 09.11.2011 தேதி நான் சொல்வது போல் ஆய்வாளரை நான் சந்திக்கவில்லை என்றாலும் என்னையும் சாட்சி சம்பத்தையும் வாதி முருகசாமிக்கு ஆய்வாளர் அறிமுகபடுத்திவைக்கவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கையின் நகலை என்னிடம் கொடுத்து படித்து பார்க்க சொல்லவில்லை என்றாலும்

அதை நான் படித்து பார்க்கவில்லை என்றாலும் அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான் என்று அ.சா.2 முருகசாமி எங்களிடம் கூறவில்லை என்றாலும் சரியல்ல.

6. சோடியம் கார்பனேட் திடப்பொருளாக இருந்ததா அல்லது திரவமாக இருந்ததா என்றால் உப்பு போன்று வெண்மையாக இருந்தது. பினாப்தலின் பவுடரும் வெண்மையாகத்தான் இருந்தது. நான் முதல் விசாரணை கூறியுள்ளது போல் எனக்கு சோடியம் கார்பனேட், பினாப்தலின் பரிசோதனை எங்களுக்கு செய்துகாட்டப்படவில்லை என்றும் அதன் முக்கியத்துவம் குறித்து எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7. லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து கீழடிக்கு நாங்கள் சென்ற அரசு வாகனங்களின் பதிவு எண்கள் என்ன என்றால் ஞாபகம் இல்லை. ஒரு வாகனத்தில் நானும், அ.சா.2, சாட்சி சம்பத் மற்றும் ஆய்வாளரும் மற்றொரு வாகனத்தில் போலிஸ் பார்ட்டியும் வந்தனர். அன்று பகல் 2.15 மணிக்கு அ.சா.2 முருகசாமி தன் செல் போனில் ஸ்பீக்கரில் போட்டு எதிரியிடம் பேசியபோது எதிரி பணம் தயாராக இருக்கிறதா என்றுதான் கேட்டாரே தவிர எனக்கு தரவேண்டிய பணம் தயாராக இருக்கிறதா என்று கேட்கவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை ஆனால் பணம் தாயாராக இருக்கிறதா என்று கேட்டார்.

8. அன்றைய தேதியில் அ.சா.2 முருகசாமி எதிரியிடம் எத்தனை முறை செல்போனில் பேசினார் என்றால் சுமார் 4,5 முறை பேசினார். எதிரி அ.சா.2

முருகசாமி செல்போனுக்கு எத்தனை முறை பேசினார் என்றால் 2 அல்லது 3 முறை இருக்கும். அவர்களுக்கு இடையே நடந்த செல்போன் உரையாடலை அ.சா.2 முருகசாமி தன் செல்போனில் பதிவு செய்தாரா என்றால் ஞாபகம் இல்லை.

9. அ.சா.2 முருகசாமியும் எதிரியும் அவ்வாறு பேசிக்கொண்டபோது ஒருமுறை கூட எதிரி பணம் தயாராக இருக்கிறதா என்று கேட்கவும் இல்லை என்றும் முருகசாமி பணம் தயாராக இருக்கிறது என்று சொல்லவும் இல்லை என்றும் போலிஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு பணம் தயாராக இருக்கிறதா என்று எதிரி கேட்டதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. முதல் முறை மதியம் 2.15 மணிக்கு அ.சா.2 முருகசாமி எதிரியை செல்போனில் தொடர்பு கொண்டபோது எதிரி மானாமதுரை EB அலுவலகத்தில் இருப்பதாகதான் சொன்னார் என்றால் சரிதான். சிவகங்கை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கும் மானாமதுரை EB அலுவலகத்திற்கும் இடையே தோராயமாக 14 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த அலுவலகம் சிவகங்கையில் இருந்து தெற்கே உள்ளது என்றால் சரிதான். மானாமதுரை EB அலுவலகத்தில் இருந்து கீழடியில் உள்ள எதிரியின் அலுவலகம் மேற்கே தோராயமாக 25 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான் மேற்கே அமைந்துள்ளதா என்பது எனக்கு தெரியாது,

11. கீழடியில் இருந்து அ.சா.2 முருகசாமி மதுரையில் தங்கியிருந்த விஜய் லாட்ஜ் சுமார் 35 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சிவகங்கையில் இருந்து நேர் மேற்கே சுமார் 47 கி.மீ தொலைவில் மதுரை விஜய் லாட்ஜ் உள்ளது என்றால் சரிதான் ஆனால் நேர் மேற்கே என்பது எனக்கு தெரியாது.

12. மானாமதுரையில் தான் இருப்பதாக எதிரி தெரிவித்தவுடன் எங்கள் பார்ட்டி நேரடியாக மானாமதுரைக்கு அவர் சென்றிருந்த அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் சிவகங்கையில் இருந்து கீழடிக்கு மானாமதுரை வழியாக செல்லவில்லை. கீழடி, சிலைமான் செல்லாமலேயே சிவகங்கங்கையில் இருந்து மதுரைக்கு நேரடியாக செல்லலாம் என்றால் சரிதான்.

13. சிலைமானுக்கும் கீழடிக்கும் இடையே தோராயமாக 5 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். எதிரி கீழடி அலுவலகத்திற்கு வந்த பிறகு நான் எங்கு வரச்சொல்கிறேனோ அங்கு வாருங்கள் என்றுதான் சொன்னாரே தவிர தான் கீழடி அலுவலகத்தில் இருக்கிறேன் என்றோ நேரடியாக அங்கு வந்து தன்னை பார்க்குமாரோ எதிரி கூறவில்லை என்றால் சரிதான்.

14. சிலைமானில் 45 நிமிடத்தில் இருந்து ஒரு மணி நேரம் காத்திருந்தோம். அந்த ஒரு மணி நேரத்தில் எதிரியை கீழடிக்கு சென்று அவருடைய அலுவலகத்தில் சந்தித்தோமா என்றால் இல்லை. எதிரி தான் மதுரைக்கு வருவதாக சொன்னவுடன் நாங்கள் சிலைமானில் இருந்து கீழடி

சென்று எதிரியை சந்திக்காமல் நேரடியாக மதுரைக்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான்.

15. மதுரையில் பெரியார் பேருந்து நிலையத்திற்கு தெற்கே சுமார் 200 மீட்டர் தொலைவில் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள தெருவில் விஜய் லாட்ஜ் உள்ளது என்றால் சரிதான் அது அமைந்துள்ள திசையை பற்றி எனக்கு சரியாக தெரியாது. விஜய் லாட்ஜின் வரவேற்பறையில் சிசிடிவி கேமரா பொறுத்தப்பட்டிருந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வரவேற்பறைக்கு 5 அடி தொலைவில் மேலே செல்வதற்கு லிப்ட் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. வரவேற்பறைக்கு அருகிலேயே மாடிப்படிகள் உள்ளது என்றால் சரிதான்.

16. விஜய் லாட்ஜில் வரவேற்பாளர் பகுதி எந்த இடத்தில் உள்ளது என்று ஞாபகம் இல்லை. அந்த வரவேற்பறையில் வரவேற்பாளருக்கு அருகில் பார்வையாளர்கள் அமரக்கூடிய சோபா செட் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.2 தங்கியிருந்ததாக சொல்லும் அறை எண்.308 மூன்றாவது மாடியில் உள்ளது என்றால் சரிதான். மூன்றாவது மாடிக்கு நாங்கள் லிப்டில் செல்லாமல் படி ஏறித்தான் சென்றோம் என்றால் சரிதான்.

17. நாங்கள் விஜய் லாட்ஜில் நுழைந்து மாடிப்படிக்கு சென்றது அங்கிருந்த வரவேற்பாளருக்கு தெரியுமா என்றால் தெரியும். விஜய் லாட்ஜ் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மாடியில் உள்ள அறைகள் தென்வடல்

திசையில் உள்ளதா அல்லது கிழமேல் திசையில் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. 3 வது மாடியில் எத்தனை அறைகள் உள்ளன என்றால் ஞாபகம் இல்லை. அறை எண்.308 எந்த திசையை நோக்கி அமைந்துள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அந்த அறையில் ஜன்னல்கள் உண்டா என்று சரியாக ஞாபகம் இல்லை.

18. மூன்றாவது மாடியில் இருந்து பார்த்தால் தரைதளத்தில் உள்ள பகுதி தெரியாது அந்த லாட்ஜிக்கு முன்புறம் செல்லக்கூடிய திருப்பரங்குன்றம் செல்லும் ரோடும் தெரியாது. அறை எண் 308 சுமார் 10' X 11' அடி அளவுள்ளது என்றால் சரிதான். அந்த அறையில் என்னென்ன இருந்தது என்றால் கட்டில், மின்விசிறி, லைட் ஆகியவை இருந்தது. அந்த கட்டில் தென்வடலாக போடப்பட்டிருந்ததா அல்லது கிழமேலாக போடப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. அந்த கட்டில் இரும்பு கட்டிலா அல்லது மரக்கட்டிலா என்றால் நான் கவனிக்கவில்லை. அந்த அறைக்கு பூட்டு கார்ட் போட்டு திறக்ககூடியதா அல்லது சாவி போட்டு திறக்ககூடியதா என்றால் ஞாபகம் இல்லை. அந்த அறைக்கு என்ன நிறத்தில் பெயின்ட் அடிக்கப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை.

19. அறை எண் 308 ல் இருந்து லிப்ட் எந்த பக்கம் எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. அந்த அறையில் இருந்து மாடிப்படி எந்த பக்கம் எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால் எந்த திசை என்பது எனக்கு

ஞாபகம் இல்லை ஆனால் தோராயமாக 15 ல் இருந்து 20 அடி தூரத்தில் மாடிப்படி இருந்தது.

20. அ.சா.2 முருகசாமியும், எதிரியும் ஸ்பீக்கர் போட்டு செல்போனில் பேசியதை தவிர வேறு என்னென்ன பேசிக்கொண்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை லாட்ஜிக்கு போங்கள் நான் வருகிறேன் என்று எதிரி சொன்னார். நாங்கள் எதிரிக்காக அறை எண் 308 லோ அல்லது வரவேற்பறையிலோ காத்திருக்கவில்லை லாட்ஜிக்கு வெளியில் முன்புறம் உள்ள ரோட்டில் காத்திருந்தோம். நாங்கள் 30 ல் இருந்து 40 நிமிடங்கள் அவ்வாறு காத்திருந்தோம். எந்த திசையில் இருந்து எதிரி லாட்ஜிக்கு வந்தார் என்றால் ஞாபகம் இல்லை.

21. எதிரி நான் அறைக்கு வந்துகொண்டிருக்கிறேன் என்று போனில் சொன்னவுடன் நாங்கள் அறைக்கு சென்றுவிட்டோம். பிறகு வரவேற்பறையில் இருந்து அ.சா.2 முருகசாமிக்கு எதிரி போன் செய்தார். எதிரி மிஸ்ட்கால் 7.15 மணிக்கு முருகசாமிக்கு கொடுத்தார் மிஸ்ட்கால் எங்கிருந்து கொடுத்தார் என்பது தெரியாது. மிஸ்டுகாலை பார்த்து முருகசாமி எதிரிக்கு கால் செய்து தான் அறை எண் 308 ல் இருப்பதாக தகவல் சொன்னார். சொன்னவுடன் எதிரி அவராகவே அறை எண் 308 க்கு வந்துவிட்டார்.

22. எதிரி அவ்வாறு வந்தபோது நானும், அ.சா.2 முருகசாமியும் அந்த அறையில் இருந்தோம். அறைக்கு வந்த எதிரி அறையின் கட்டிலில் அமர்ந்து

10 முதல் 15 நிமிடங்கள் அ.சா.2ம் எதிரியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் அருகில் இருந்தேன் அவர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. எதிரி என்னை பார்த்து இவர் யார் என்று கேட்கவில்லை ஆனால் அ.சா.2 முருகசாமி ஏதோ ஒரு உறவு முறை சொல்லி என்னை எதிரிக்கு அறிமுகப்படுத்தினார். அவர் என்ன உறவு முறை சொல்லி அறிமுகப்படுத்தினார் என்பது ஞாபகம் இல்லை.

23. அவ்வாறு அறிமுகப்படுத்தியபோது எதிரியும் நானும் கைகொடுத்துக்கொள்ளவில்லை. அ.சா.2ம் எதிரியும் கைகொடுத்துக்கொண்டார்களா என்று ஞாபகம் இல்லை. எதிரிக்கு அ.சா.2 டீ, அல்லது காபி ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. எதிரி அறைக்குள் நுழைந்தவுடன் பணத்தை கேட்டு வாங்கிக்கொண்டு அறையை விட்டு வெளியில் செல்லவில்லை. 10, 15 நிமிடங்கள் பேசிவிட்டு பிறகுதான் பணத்தை கேட்டு வாங்கியவுடன் அறையைவிட்டு சென்றுவிட்டார்.

24. எதிரி அறையை விட்டு வெளியில் வந்தபோது ஆய்வாளர் பார்ட்டி எங்கிருந்தார்கள் என்றால் அதே தளத்தில் 40ல் இருந்து 45 அடி தூரத்தில் இருந்தார்கள். எதிரி அறையைவிட்டு வெளியே வந்தவுடன் எவ்வளவு தூரத்தில் வைத்து ஆய்வாளர் எதிரியை பிடித்தார் அறையின் வாசலில் இருந்து 20 அடி தூரத்தில் ஆய்வாளர் எதிரியை பிடித்தார். ஆய்வாளர் எதிரியை பிடித்தபோது எதிரி ஓட எதுவும் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான்.

25. எதிரியை உடனே ஆய்வாளர் அறை எண் 308 க்கு அழைத்து வந்தார். நான் சொல்வது போன்று ஆய்வாளரோ, நானோ மற்றும் பார்ட்டியினரோ அறை எண் 308 க்கு செல்லவேயில்லை என்றும் எதிரியும் மேற்படி அறைக்கு வரவில்லை என்றும் அங்கு வைத்து எதிரி அ.சா.2 யிடம் பணம் கேட்கவும் இல்லை பணம் வாங்கவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த அறையில் வைத்து எந்த பரிசோதனையும் செய்யவில்லை என்றும், அங்கு வைத்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

26. எதிரிக்கு கொடுத்தாக சொல்லப்படும் மாற்று பேன்ட் யாருடையது என்றால் ஞாபகம் இல்லை. அந்த மாற்று பேன்ட் என்ன நிறம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி அன்றைய தினம் அணிந்திருந்த சட்டையின் நிறம் என்ன என்று ஞாபகம் இல்லை. அந்த மாற்று பேன்ட் அந்த அறையில் இருந்து எடுத்தார்களா அல்லது வெளியில் இருந்து கொண்டுவந்தார்களா, அது புதியதா அல்லது பழையதா என்றால் ஞாபகம் இல்லை.

27. எதிரியின் வீடு பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து விஜய் லாட்ஜ் வழியாக சென்று வில்லாபுரத்தில் உள்ளது என்றால் வில்லாபுரத்தில் உள்ளது அது தெற்கு பார்த்து அமைந்துள்ளதா என்பது எனக்கு ஞாபகம் இல்லை.

28. அன்றைய தினம் எதிரி பெரியார் பேருந்து நிலையத்தில் இறங்கி விஜய் லாட்ஜ் வழியாக தனது வீட்டிற்கு செல்வதற்காக தெற்கு நோக்கி

சென்றார் என்றும் அப்போது அ.சா.2 முருகசாமி அவரை வழிமறித்து தனக்கு மதுரையில் EB தளவாட சாமான்கள் விற்கும் கடை எங்கிருக்கிறது என்று தெரியாது என்றும் எதிரி தன்னுடன் வந்து கடையை காட்டி சாமான்களை வாங்கித்தர கேட்டார் என்றும் அவ்வாறு எதிரி முன்னும் அ.சா.2 பின்னுமாக பேச்சு கொடுத்து கொண்டு சென்றுகொண்டிருந்தபோது எதிரிக்கு தெரியாமல் எதிரி அணிந்திருந்த பேன்ட்டின் பின்பாக்கெட்டில் ஆய்வாளர் ஆலோசனையின்படி பணத்தை கத்தையாக அ.சா.2 முருகசாமி திணித்தார் என்றும் அதை சற்றும் எதிர்பார்க்காத எதிரி என்ன சார் என்று கேட்டுக்கொண்டே தன் பாக்கெட்டில் இருந்த பணத்தை வெளியில் எடுத்தபோது தெரு ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஆய்வாளர் மற்றம் பார்ட்டி அங்கு பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் எதிரியை அப்படியே ஜூப்பில் ஏற்றிக்கொண்டு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அழைத்து வந்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

29. சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு அலுவலகத்தில் வைத்து எதிரியை நிர்பந்தப்படுத்தி பல ஆவணங்களில் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்தது சம்மந்தமாக விஜய் லாட்ஜ் அறை எண் 308ல் இருந்து கைது நமுனா அ.த.சா.ஆ.7 தயார் செய்யப்படவில்லை என்றும், எதிரியை கைது செய்ததை முறையாக

அவருடைய குடும்பத்திற்கு தெரியப்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

30. எதிரி கைது செய்யப்பட்டது குறித்து மற்றவர்கள் மூலம் எதிரியின் குடும்பத்தார் தெரிந்துகொண்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்தபோது எதிரியின் வீட்டை சோதனை செய்யாமலேயே ஒரு சோதனை ஜாபிதா தயார் செய்து எதிரியின் மகளிடம் மிரட்டி கையெழுத்து பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

31. நான் சொல்வது போல் விஜய் லாட்ஜ் அறை எண்.308 ல் இருந்து அ.த.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் அங்கு வைத்து லாட்ஜ் மேனேஜரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. லாட்ஜ் மேலாளரை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வரவழைத்து அங்கு வைத்து அ.த.சா.ஆ.12 ல் மிரட்டி கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

32. எதிரியின் வீட்டின் கதவு எண், அது ஓட்டு வீடா அல்லது தார்ஸ் வீடா, எந்த தெரு மற்றும் எந்த திசையை நோக்கி அமைந்துள்ளது என்பது ஞாபகம் இல்லை. எதிரியின் வீட்டில் எத்தனை அறைகள் என்னென்ன அமைப்புகள் இருந்தன என்பது ஞாபகம் இல்லை. எதிரியின் வீட்டிற்கு செல்லாமலும் எந்தவித சோதனையும் நடத்தாமலும் எதிரியின் வீட்டிற்கு சென்றதாகவும்

அங்கு வைத்து அ.த.சா.ஆ.13 சோதனை ஜாபிதா தயார் செய்ததாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

33. கீழடியில் உள்ள எதிரியின் அலுவலகம் எந்த திசையை நோக்கி எந்த தெருவில் அமைந்துள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எதிரியின் அலுவலகத்தில் எத்தனை அறைகள் உள்ளன என்றால் ஞாபகம் இல்லை. கீழடி அலுவலகத்திற்கு நாங்கள் செல்லவும் இல்லை என்றும், அங்கு வைத்து அ.த.சா.ஆ.14 முதல் அ.த.சா.ஆ,19 வரையான ஆவணங்கள் கைப்பற்றப்படவும் இல்லை என்றும், அ.த.சா.ஆ.20 கைப்பற்றுதல் மகஜர் அங்கு வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், அ.த.சா.ஆ.14 முதல் அ.த.சா.ஆ.19 வரையான ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு கொண்டுவரச்சொல்லி அங்கு வைத்து அ.த.சா.ஆ.20 கைப்பற்றுதல் மகஜர் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல்.

34. திரு.குதாபக்ஸ் என்பவர் அ.சா.2 முருகசாமி இடத்திற்கு அவர் நிலத்தின் வழியாக மின்கம்பம் ஊன்றக்கூடாது என்று ஆட்சேபித்திருந்தார் என்று எதிரி ஆய்வாளரிடம் தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் ஆய்வாளர் அ.சா.2 முருகசாமியை அழைத்து கேட்டபோது அவ்வாறு எந்த ஆட்சேபனையும் தனக்கு வரவில்லை என்று தெரிவித்தார்.

35. எதிரி அ.சா.2 முருகசாமியிடம் பணம் எதுவும் கேட்கவும் இல்லை அ.சா.2 எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல.

**அ.த.சா.ஆ.5 ஒப்படைப்பு மகஜர் நான் சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரியாக இருப்பதால் லஞ்ச ஒழிப்பு போலிஸாரின் நிர்ப்பந்ததத்திற்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

***<u>மறு விசாரணை</u> : இல்லை***

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.10.06 16:31:33 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.